# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in

## முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்

## மேல்முறையீட்டு மனு எண் 93 /2015

திரு. கே. ராமசாமி,
த/பெ.கருப்பண்ண கவுண்டர்,
சாணாங்காடு
நல்லியம்பாளையம் புதூர்,
வேலூர் – 638 182. --- மேல்முறையீட்டாளர்
(திரு. கே. ராசப்பன்)

எதிர்

செயற்பொறியாளர்,
ப. வேலூர்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பைபாஸ் ரோடு,
பரமத்தி வேலூர் – 638 182. --- எதிர்மனுதாரர்
(திரு. எம்.பன்னீர்செல்வம், செயற்பொறியாளர், பரமத்தி வேலூர்)

**கேட்புரை நாள் : 11–2–2016**

**ஆணை நாள் : 29–02–2016**

திரு. கே. ராமசாமி, த/பெ கருப்பண்ண கவுண்டர் சாணங்காடு, நல்லியம்பாளையம் புதூர் அவர்களின் 18.11.2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண் 93/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை 11.2.2016 அன்று

நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், இருதரப்பினராலும் கேட்புரையின் பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள், சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :

மேல்முறையீட்டாளர் அவரின் விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தை கூட்டு உரிமையாளரின் கையொப்பம்/சம்மத கடிதம் இல்லாமல் பிணை முறிவு பத்திரம் பெற்றுக் கொண்டு பதிவு செய்ய தக்க ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

### 2. வழக்கின் சுருக்கம் :

2.1 மேல்முறையீட்டாளர் , புஞ்சையிடையார் மேல் முகம் கிராமம் சர்வே எண்.98/8 உள்ள கூட்டு கிணற்றிற்கு 5 குதிரைத்திறன் விவசாய மின் இணைப்பு வேண்டி பிணை முறிவு பத்திரத்துடன் செயற்பொறியாளர்/பரமத்தி வேலூர் அலுவலகத்திற்கு பதிவு அஞ்சலில் விண்ணபத்தை 23.6.2015 அன்று அனுப்பியுள்ளார். விண்ணப்பம் 24.6.2015 அன்று செயற்பொறியாளர் அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது.

2.2 மேற்கண்ட விண்ணப்ப படிவத்துடன் கூட்டு உரிமையாளர்களின் ஒப்புதல் கடிதம் பெறாமல் பிணை முறிவு பத்திரம் இணைத்து அனுப்பப்பட்டுள்ளதால் ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணையின்படி விண்ணப்பம் ஏற்க முடியாது என்று செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

2.3 மேல்முறையீட்டாளர் நாமக்கல் மின் பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு தன்னுடைய முறையீட்டை 1.10.2015ல் சமர்ப்பித்துள்ளார்.

2.4 மன்றம் தன்னுடைய தீர்வை 7.11.2015 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. மேற்கண்ட ஆணையில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டை மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளார்.

3. <u>மன்றத்தின் ஆணை :</u>

3.1 நாமக்கல் மின் பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய 07.11.2015 நாளிட்ட ஆணையில் கீழ்கண்ட தீர்வை தெரிவித்துள்ளது.

*"<u>ஆணை</u>*

*மனுதாரரின் கூட்டு உரிமையாளரின் கையொப்பம் சம்மத கடிதம் இல்லாமல் பிணை முறிவு பத்திரம் பெற்று விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தினை பதிவு செய்ய கோரும் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. மேலும், மேற்கண்ட ஆவணங்கள் பெற்று விண்ணப்ப பதிவு கட்டணம் செலுத்தி செயற்பொறியாளர் அலுவலகத்தில் விவசாய விண்ணப்பம் பதிவு செய்த நாளிலிருந்துதான் முன்னுரிமை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதை இம்மன்றம் ஆய்ந்தறிந்து இவ்வாணையின் மூலம் உத்தரவிட்டும் மேற்படி மனு எண்.010/2015–16 ஆனது இம் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் இறுதி முடிவு செய்யப்படுகிறது. "*

4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :</u>

4.1 மேல்முறையீட்டாளர் நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், புஞ்சையிடையார் மேல்முகம் கிராமம் ச.எண்.98/8–ல் உள்ள கூட்டு கிணற்றிற்கு ஐந்து பரித்திறன் மின்இணைப்பு வேண்டி அதற்கான ஆவணங்களின் பிணை முறி பத்திரம் இணைத்து செயற்பொறியாளர், பரமத்தி வேலூர் அவர்கட்கு விண்ணப்பித்து அதை கள ஆய்வுக்காக உதவிப் பொறியாளர்/இப/பரமத்தி வேலூர் அவர்கட்கு அனுப்பி, உதவி பொறியாளர் அவர்கள் கள அய்வுக்குப் பின்பு 15.6.2015ஆம் தேதி செயற்பொறியாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்த பொழுது கிணற்றின் கூட்டுரிமையாளர் விண்ணப்பத்தில் கையொப்பமிட வேண்டும் அல்லது சம்மதக் கடிதம் கொடுக்க வேண்டுமே

அன்றி கூட்டுரிமையாளர் கையொப்பமிடாமைக்கு பிணை முறி பத்திரம் (Indemnity Bond) இணைக்கக்கூடாது என்று கூறியதன் அடிப்படையில் மீண்டும் விண்ணப்பத்தையும் அதற்கான ஆவணங்கள் ரூ.50/–க்கு வரைவோலை ஆகியவற்றையும் பதிவு அஞ்சலில் 23.6.2015 செயற்பொறியாளர், பரமத்தி வேலூருக்கு அனுப்பியதை 24.6.2015 ஆம் தேதி பெற்றுக் கொண்டு க.எண்.செ.பொ/இப/ப.வே/உ.வ/(கம்பி)க.தனி/எண்.019/15 நாள்30.6.2015ன் படி 'கிணற்றின் கூட்டுரிமை தாரர்களின் ஒப்புதல் கடிதம் பெறாமல் பிணை முறிவு பத்திரம் அனுப்பினால் தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்திரவின்படி விண்ணப்பம் ஏற்க இயலாது என தெரிவித்துவிட்டார்.

4.2 ஒரு கிணற்றின் கூட்டுரிமையாளர் விண்ணப்பத்தில் கையொப்பம் இடவில்லை என்றோ சம்மதம் கடிதம் கொடுக்காத நிலையில் Memo No.SE/RE/D/110-R/D/86 Tech Br) dated 28.10.1986ன் படி பிணை முறி பத்திரம் கொடுக்கலாம் என பார்வையின் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

4.3 Memo No.SE/IEMC/EE3/AEE2/D185/189(Tech Br) dated 12.07.1989ன் குறிப்பாணையில் ''விவசாயிகளுக்கு ஒரு வழிகாட்டி''ல் கிணற்றின் கூட்டுரிமையாளர் கையொப்பம் இடாவிட்டால் பிணை முறி பத்திரம் கொடுக்கலாம் என வழிகாட்டியுள்ளது.

4.4 கடித எண்.மே.பொ/ஊ.மி.ம.மே(ப)செ.பொ/ஊ.மி/உ.செ.பொ1/கோப்பு எண்.1481, நாள் 27.10.2010 கடிதத்தின்படி தகவல் உரிமை சட்டம் 2005ன் கீழ் விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு கூட்டுரிமையாளர்கள் சம்மதம் கொடுக்காத நிலையிலும் மின்சார விண்ணப்பத்தில் சம்மதம் தெரிவிக்காத நிலையிலும் Memo No.SE/RE/D/110-R/D/86 (Tech Br) dated 28.10.1986ன் படி Indemnity Bond தரவேண்டும் என்ற ஆணை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணை 2004க்கு பின்பும் அமுலில் இருக்கிறதா என்ற தகவலுக்கு (RTI) விவசாய மின் இணைப்பு

பெறுவதற்கு கூட்டு உரிமையாளர்கள் சம்மதம் கொடுக்காத நிலையிலும் Indemnity Bond அளித்தால் மின் இணைப்பு வழங்கப்படும் என்பது நடைமுறையில் உள்ளது என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4.5 மற்ற மின் பகிர்மான வட்டங்களில் கூட்டுரிமையாளர்கள் கையொப்பம்/இசைவு தராத நிலையில் Indemnity Bond பெற்றுக்கொண்டு மின்சார விண்ணப்பம் பதிவு செய்யும் நிலையில் நாமக்கல் மின் பகிர்மான வட்டத்தில் மறுப்பது எந்த விதத்தில் நியாயம் ஆகும். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அனைத்தது பகிர்மானத்திற்கும் சட்ட நடைமுறை ஒன்று தானே. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய பகிர்மான தொகுப்பில் இல்லாத சில ஆணைகள் சிலவற்றிற்கு பழைய ஆணைகள் தானே பின்பற்றப்படுகிறது என தெரியவருகிறது.

4.6 மின்குறைதீர்க்கும் மன்றம், நாமக்கல் அவருடைய முறையீட்டை பெற்றுக்கொண்டு மனு எண்.10/2015–16ஐ 7.11.2015 ஆம் தேதி நடைபெற்ற விசாரணையில் அவருடைய கோரிக்கையை நிராகரித்து விட்டார்கள்.

4.7 தமிழ்நாடு மின்சார வாரியம் என்பது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் லிமிடெட் ஆக 21.7.2004 ஆம் தேதி மாறும்பொழுது கிணற்றின் கூட்டு உரிமையாளர்கள் கையொப்பமிடாவிட்டால் பிணை முறி ஈட்டுறுதி பத்திரம் இணைக்கலாம் என்ற முன்பிருந்த கோட்பாட்டை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்பகிர்மான விதித்தொகுப்பு பிரிவு 27(2)ல் படிவம் 2ல் உள்ள குறிப்பில் சேர்க்காமல் விட்டு விட்ட நிலையால் அவருடைய விவசாய விண்ணப்பத்தை ஏற்க மறுக்கிறார்கள்.

4.8 அவர் ஒரு ஏழை விவசாயி, அவருக்கு இதுவரை அவருடைய கிணற்றிற்கு சாதாரண வரிசை அடிப்படையில் விண்ணப்பிக்க முடியாத நிலையில் தற்பொழுதுதான் மின்இணைப்பு வேண்டி கொடுத்த விண்ணப்பத்தை பதிவு செய்ய மறுப்பது எந்த விதத்தில் நியாயம் பிணை

முறிவு பத்திரம் இணைக்கக் கூடாது என்றால் அவரைப் போல் 90 % விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, மேற்கண்டவற்றை பரிசீலனை செய்து அவருடைய மின்சார விண்ணப்பத்தை பதிவு செய்ய தக்க ஆணை பிறப்பிக்க தாழ்மையுடன் வேண்டி கேட்டுக் கொண்டுள்ளார்.

## 5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>

5.1 மனுதாரர் திரு. க. ராமசாமி, அவர்கள் ப.வேலூர் வட்டம், புஞ்சை இடையார் மேல்முகம் கிராமத்தில் அவருக்கு சொந்தமான சர்வே எண்.98/8ல் உள்ள கூட்டு கிணற்றிற்கு மின்இணைப்பு வேண்டி அளித்த அவரது விண்ணப்பத்தின் அடிப்படையில் ஆவணங்களை ஆய்வுசெய்த பொழுது விண்ணப்பிக்கப்பட்ட கிணறு விண்ணப்பத்திற்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்பதும் விண்ணப்பதாரர் அக்கிணற்றுக்கு கூட்டு உரிமையாளர்களின் சம்மத கடிதம் பெறாமல் அதற்கு பதிலாக பிணை முறிவு பத்திரம் இணைக்கப்பட்டுள்ளதும் கண்டறியப்பட்டது.

5.2 தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் பகிர்மான விதித்தொகுப்பு பிரிவு 27(2)ன் படி மின் இணைப்பு கோரும் கிணறு உள்ள சர்வே எண். விண்ணப்பத்திற்கு கூட்டாக பாத்தியப்பட்டிருப்பின் கூட்டுரிமைதாரர்களின் ஒப்புதல் பெறப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதால் மனுதாரரின் விண்ணப்பத்தினை பதிவு செய்யாமல் மனுதாரரின் விண்ணப்பத்திற்கு கூட்டுரிமையாளர்களின் சம்மதக் கடிதம் பெறப்பட்டு விண்ணப்பம் பதிவு செய்யுமாறு ஆலோசனை வழங்கி விண்ணப்பம் திருப்பி அனுப்பப்பட்டது.

5.3 மனுதாரர் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் நாமக்கல் மின்பகிர்மான வட்டத்தின் அலுவலகத்தில் மேல்முறையீடு செய்து அம்மன்றத்தில் அம்மனுவானது எண்.010/2015 ஆக பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

5.4 விசாரணையில் மனுதாரர் தரப்பில் மின்இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டும் கிணறு கூட்டுக்கிணறாக இருப்பினும் கூட்டுதாரர் சம்மத கடிதம் பெற இயலாத பட்சத்தில் Memo No.SE/RE/D/110-3/D/86(Technical Branch) dt/28/10/1986 மற்றும் Memo No/SE/IEMC/EE3/AEE–2/D185/89 (Technical Branch) dt.12.7.1989 உள்ள வாரிய வழிகாட்டுதலில் விண்ணப்பிக்கப்படும் கிணறு கூட்டாக இருப்பினும் கூட்டுதாரர் சம்மத கடிதம் பெற இயலாத சூழ்நிலையில் பிணைமுறிவு பத்திரம் இணைத்து விண்ணப்பம் பதிவு செய்யலாம் என்றுள்ளதால் அவரது விண்ணப்பத்தினை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

5.5 அவரது கோரிக்கையினை பரிசீலனை செய்த விசாரணை தலைவர் அவர்கள் விவசாய விண்ணப்பங்களை தற்போதைய நடைமுறையில் உள்ள TNERC Distribution Code விதி 27(2)ன் படி முழுமையாக இருந்தால்தான் பதிவு செய்யப்படவேண்டும் என்றும் மேற்கண்ட வழிகாட்டுதலின்படி இணைக்கப்பட்டுள்ள விவசாய விண்ணப்பத்தில் (Form-II) அனைத்து கூட்டு உரிமைதாரர்களிடமும் கையொப்பம் பெறப்படவேண்டும் அல்லது பிற கூட்டு உரிமையாளர்களின் சம்மத கடிதம் இணைக்கப்படவேண்டும் என வாரியத்தின் 6.1.2015, 9.6.2015 மற்றும் 25.7.2015 நாளிட்ட வழிகாட்டுதலில் வலியுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும், 17.7.2013ம் ஆண்டு Madras High Court-ல் W.P.No.2294 of 2010ல் திரு M.P. முத்துசாமி என்பவரால் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்புரையில் விவசாய விண்ணப்பங்கள் TNERC Distribution Code விதி 27(2)ன் படி இல்லையென்றால் விவசாய மின்இணைப்பு வழங்க முடியாது என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதையும் மனுதாரருக்கு சுட்டிக்காட்டி மனுதாரரின் விவசாய விண்ணப்பத்தில் கூட்டுரிமைதாரர் கையொப்பம் மற்றும் சம்மத கடிதம் இல்லாமல் பிணை முறிவு பத்திரம் இணைத்து விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தினை பதிவு செய்ய கோரும் கோரிக்கை நிராகரிக்கப்படுவதாக நாமக்கல் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் இறுதி முடிவு செய்யப்பட்டதாக தீர்ப்பு வழங்கியுள்ளார்.

5.7 மனுதாரர் தற்பொழுது அதே காரணங்களை சுட்டிக்காட்டி விண்ணப்பிக்கப்பட்ட கிணறுக்கு பிணைமுறிவு பத்திரம் பெற்றுக்கொண்டு விண்ணப்பம் பதிவு செய்து மின்இணைப்பு வழங்குமாறு மின்சார குறைதீர்ப்பாளர் சென்னை அவர்களுக்கு மேல்முறையீடு செய்துள்ளார்.

5.8 மனுதாரர் அவரது மேல்முறையீடு விண்ணபத்தில் 28.10.1986 மற்றும் 12.7.1989 நாளிட்ட வாரிய ஆணைகளின் வழிகாட்டுதலின்படியும் மற்றும் 27.10.2010 நாளிட்ட கடிதத்தில் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005ன் கீழ் தகவல் வழங்கப்பட்டதில் கூட்டுதாரர்கள் சம்மத கடிதம் பெற இயலாத பட்சத்தில் பிணை முறிவு பத்திரம் இணைத்து மின்இணைப்பு பெறுவது 2004க்கு பின்பும் நடைமுறையில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும் மனுதாரர் மீண்டும் அதே கோரிக்கையை வலியுறுத்தி அவரது விவசாய விண்ணபத்தினை கூட்டுதாரர் சம்மத கடிதம் இல்லாமல் பிணைமுறிவு பத்திரம் இணைத்துள்ளதை ஏற்றுக்கொண்டு விவசாய மின்இணைப்பு வழங்குமாறு மேல்முறையீடு மனு தாக்கல் செய்துள்ளார்.

5.9 TNERC Notification No.TNERC/DC/8-21, dated 7.10.2014-ன் வழிகாட்டுதல் இயக்குனர்/பகிர்மானம் அவர்களின் 6.1.2015 நாளிட்ட குறிப்பாணை வாயிலாக சுற்றறிக்கையாக பெறப்பட்டது. அதன்படி TNERC Distribution Code விதி 27(3)ல் சில திருத்தங்கள் செய்யப்பட்டு அதில் தாழ்வழுத்த மின்பாதையில் விவசாய பயன்பாடு தவிர மற்ற மின் இணைப்புகளுக்கு கூட்டுதாரர் சம்மத கடிதம் பெறப்படாத நிலையிலும் பிணை முறிவு பத்திரம் மற்றும் அதிகப்படியான காப்புதொகை பெற்றுக்கொண்டு விண்ணப்பம் பதிவு செய்து கொள்ளலாம் என்று வழிகாட்டப்பட்டுள்ளது.

5.10 ஆனால், TNERC Distribution Code விதி 27(2)ல் எவ்வித திருத்தமும் செய்யப்படவில்லை. மேற்கண்ட வாரிய வழிகாட்டுதலின்படி விவசாய மின்இணைப்பு கோரும் கிணறு உள்ள சர்வே எண் விண்ணப்பதாரருக்கு கூட்டாக பாத்தியப்பட்டிருப்பின்

கூட்டுரிமைதாரர்களின் ஒப்புதல் பெறப்படவேண்டும் என்ற நடைமுறைதான் தற்பொழுதும் பின்பற்றப்படுகிறது.

5.11 மேற்கண்ட பதிலுரையை பரிசீலனை செய்து தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்பகிர்மான விதித்தொகுப்பு பிரிவு 27(2)ன் படி மின் இணைப்பு கோரும் கிணறு உள்ள சர்வே எண். விண்ணபதாரருக்கு கூட்டாக பாத்தியப்பட்டிருப்பின் கூட்டுரிமைதாரர்களின் ஒப்புதல் பெறப்படவேண்டும் என வாரிய வழிகாட்டுதல் உள்ளதால் மனுதாரர் கூட்டுதாரர் சம்மத கடிதத்துடன் விண்ணப்பம் பதிவு செய்து மின்இணைப்பு பெற்றுக்கொள்ளுமாறு தீர்ப்பு வழங்கிட பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## 6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 11.02.2016, அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் சார்பில் மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி திரு.கே. ராசப்பன், அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. எம்.பன்னீர்செல்வம், செயற்பொறியாளர், பரமத்தி வேலூர் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

## 7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளின்பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 திரு.கே.ராசப்பன் அவர்கள் மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேலும் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 ன் படி பெறப்பட்ட மேற்பார்வை பொறியாளர்/ஊமிமமே(ப) அவர்களின் 27.10.2010 நாளிட்ட கடிதத்தில் விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு கூட்டு உரிமையாளர்கள் சம்மதம் கொடுக்காத நிலையிலும் Indemnity Bond அளித்தால் மின் இணைப்பு வழங்கப்படும் என்பது நடைமுறையில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால் மின்பகிர்மான விதித்தொகுப்பு 7.10.2004–ல் அமலுக்கு வந்த பிறகும் கூட்டு பங்குதாரர்கள் சம்மதக் கடிதம் கொடுக்கவில்லையெனில், பிணைமுறிவுப்பத்திரம் பெற்றுக்கொண்டு மின்இணைப்பு வழங்கும் வழக்கம் வாரியத்தில் உள்ளது என்று தெரிகிறது. எனவே, இந்த மனுதாரரிடம் பிணைமுறிவுப்பத்திரம் பெற்றுக்கொண்டு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று கோரினார்.

7,3 மேலும் விண்ணப்பத்தை பதிவு செய்ய பிணை முறிவு பத்திரம் இணைக்க கூடாது என்றால் அவரைப் போல் 90 சதவிகித விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதால் அவருடைய கோரிக்கையை பரிசீலனை செய்து விண்ணப்பத்தை பதிவு செய்ய ஆணை வழங்க கேட்டுக்கொண்டார்.

## 8. <u>எதிர்மனுதாரர் கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரரின் சார்பில் திரு. எம்.பன்னீர்செல்வம், செயற்பொறியாளர், பரமத்தி வேலூர் அவர்கள் கலந்து கொண்டு எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 தமிழ்நாடு மின்சார ஒழுங்குமறை ஆணையத்தின் மின் பகிர்மான விதித்தொகுப்பு பிரிவு 27(2) ன் படி மின் இணைப்பு கோரும் கிணறு உள்ள சர்வே எண் விண்ணப்பதாரருக்கு கூட்டாக இருப்பின் கூட்டுரிமைதாரர்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் அல்லது பிற கூட்டு உரிமைதாரர்களின் சம்மத கடிதம் இணைக்கப்படவேண்டும் எனவும் அவ்வாறில்லாத நிலையில் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ள இயலாது எனவும் தெரிவித்தார்.

8.3 மேலும், W.P.No.22941 of 2010ல் மதராஸ் உயர்நீதிமன்றம் 17.7.2013ல் அளித்த தீர்வின்படி விவசாய மின்இணைப்பு கூட்டு உரிமையாளரின் சம்மதக்கடிதம் இல்லாமல் வழங்க முடியாது என்று தீர்வாகி உள்ளது என்றும் தெரிவித்து அந்த தீர்வின் நகலையும் அளித்துள்ளார்.

8.2 மேலும் இயக்குநர்/பகிர்மானம் அவர்களின் 01.02.2016 நாளிட்ட கடிதத்தின் படி விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் பெறும் பொழுது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமறை ஆணையத்தின் மின் பகிர்மான விதித்தொகுப்பு பிரிவு 27(2), படிவம் 2 ல் அறிவுறுத்தியவாறு அனைத்து கூட்டு உரிமைதாரர்களிடமும் ஒப்பம் அல்லது சம்மதக் கடிதம் பெறப்பட்டிருக்க வேண்டும் எனவும் இதுசம்பந்தமாக மதராஸ் நீதிமன்றம் W.A.No.261 of 2015 & M.P.No.1 of 2015 ல் அளித்த ஆணையின் நகலையும் சமர்ப்பித்தார்.

9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 இருதரப்பினராலும், எடுத்துரைக்கப்பட்ட வாதங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது இந்த வழக்கில் கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) விவசாய மின்இணைப்பை வழங்குவதற்கு உள்ள விதி முறைகள் என்ன ?

(ii) மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான கூட்டு உரிமைதாரர்களின் ஒப்பம் / சம்மதக் கடிதம் இல்லாமல் பிணைமுறிவுப்பத்திரம் மட்டும் பெற்றுக்கொண்டு விவசாய மின் இணைப்பு விண்ணப்பத்தை பதிவு செய்ய இயலுமா ?

**10. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு</u>**

**10.1** ஒரு புதிய விவசாய மின் இணைப்பை வழங்க வேண்டும் என்றால் பின்பற்றப்பட வேண்டிய விதி என்ன என்பதை அறிந்து கொள்ள நாம் தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி 27(2) ஐ ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***" 27 Requisitions for Supply of Energy :***

*xxx xxx xxx*

*(2) Supply to Agricultural category: Application for supply to agriculture category shall be in Form 2 of Annexure III. In respect of the agricultural category, this provision shall be governed by the directives issued by the Commission from time to time, on the basis of the guidance on this matter by the National Electricity Policy (as stipulated in sub section 4 under section 86 of the Act) and the policy directions in public interest given by the State Government under sub section (1) of section 108 of the Act.*

**10.2** மேற்கண்ட விதியை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது வேளாண்மை வகையின் மின் வழங்கலுக்கு பின்னிணைப்பு – III இல் உள்ள படிவம் 2 இல் நுகர்வோர் விண்ணப்பத்தை தரவேண்டும். வேளாண்மை வகையினத்தை பொருத்த வரையில் (சட்டத்தின் 86–ம் சட்ட பிரிவில் உள்ள துணைப்பிரிவு (4) இன்படி) இப்பொருள் தொடர்பாக தேசிய மின்சார கொள்கை வழிகாட்டுதலையும், சட்டத்தின் 108 இன் பிரிவிலுள்ள துணைப் பிரிவு (1) இன்படி மாநில அரசு

பொது நலங் கருதி வெளியிடும் கொள்கை வெளிகாட்டுதலையும் அடிப்படையாக கொண்டு, ஒழுங்குமுறை ஆணையம் விதிக்கும் ஆணையின்படியும் இருக்க வேண்டும்.

**10.3** இங்கே, விண்ணப்ப படிவம், பின்னிணைப்பு III இல் உள்ளபடி இருக்க வேண்டும் என்று மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி 27 (2) இல் கூறியுள்ளதால் அந்த படிவம், கீழே தரப்பட்டுள்ளது.

*FORM-2*

*Application Form for Agriculture Service connection [refer clause 27(2)]*

*APPLICATION FOR SUPPLY OF POWER TO AGRICULTURAL PUMP SETS*

***(Note: The application should be signed by the owner of the well, if there are partners, all must sign or consent to be given by co- owners)***

*To*

*The Designated Engineer,*

*(Address of the Licensee's Distribution Centre)*

1. *Name of owner of the well or partners*
2. *Full residential address of the owner or partners*
3. *S.F. No. in which the well is situated*
4. *Revenue village name, Taluk and District*
5. *Area and type of land to be irrigated by this well (Wet / Dry)*
6. *Horse Power of motor pump sets proposed to be installed.*
7. *Type of pump set (Centrifugal/ Submersible/ Air compressor)*
8. *Consent to abide by R&C of Licensee with regard to duration of supply*

*It is certified, I am the sole owner of the well / this application is signed by all partners*

*Place :*

*Date :*

*Signature of Applicant/ Partners*

*Note : The document such as FMB map showing the location of the well, patta, chitta, adangal etc., shall be enclosed with the application.*

*Date of receipt in the*

*Office of the Engineer,*

————————————————————————

*Certified that the open well/bore well and lands measuring......................................acres and................cents in S.F.No…….............Village…………………………..........of……...................………Taluk is Exclusively owned by Thiru……….....................................................................s/o………………………………….........of ……………………………Village.*

*Jointly owned by*

*List of owners (1)……………………………………….s/o……………………….*

*(2) ……………………………………….s/o………………………*

*(3) ……………………………………….s/o……………………….*

*Certified that Thiru ……………………………………….s/o………………………*

*is small / big farmer(s)*

*Village Administrative Officer.*

10.4 மேற்கண்ட படிவத்தை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது குறிப்பு (Note) என்ற தலைப்பின் கீழ், விண்ணப்பத்தில் அவற்றின் உரிமையாளர் கையொப்பமிட வேண்டும் என்றும் பங்குதாரர்கள் இருந்தால் அனைவரும் கையொப்பமிட வேண்டும் அல்லது அவர்களின் கையொப்பமிட்ட சம்மத கடிதத்தை இணைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கிணற்றிற்கு விண்ணப்பதாரரே உரிமையாளர் / கிணற்றின் உரிமைதாரர்கள் அனைவரும் கையொப்பம் இட்டுள்ளனர் என்றும் விண்ணப்பதாரர் சான்று அளிக்க வேண்டும். மேலும், விண்ணப்பத்தில் கிராம நிர்வாக அலுவலரால், மேற்கண்ட கிணறும் அது அமைந்த இடத்தின் உரிமையாளர்களின் பட்டியல் சான்று அளிக்கப்பட வேண்டும் என்றும் அறிய முடிகிறது. எனவே, விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு விண்ணப்பத்தில் கிணற்றின் உரிமையாளர்கள் அனைவரும் மின்சாரப் பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(2)–ன் படி கையொப்பம் இடவேண்டும் அல்லது மற்ற பங்குதாரர்களின் சம்மதக் கடிதம் இணைக்கப்படவேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

11. <u>வழக்கெழுவினா இரண்டிற்கான தீர்வு</u>

11.1 மேல்முறையீட்டாளர், உரிமம்தாரரின் கீழ்கண்ட ஆணைகளை சுட்டிக்காட்டி, ஒரு கிணற்றின் பங்குதாரர்களின் சம்மதக்கடிதம் இல்லாமல் பிணைமுறி பத்திரம் பெற்றுக் கொண்டு விவசாய மின்இணைப்பை வழங்கலாம் என்று வாதிட்டுள்ளார்.

(i) Memo No/SE/RE/D/110-3/D/86 (Technical Branch) dt.28.10.1986

(ii) Memo No/SE/IEMC/EE3/AEE2/D185/89 (Technical Branch) dt. 12.7.1989

11.2 மேலும், தகவல் உரிமை சட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு கூட்டுரிமையாளர்கள் சம்மதக் கடிதம் கொடுக்காத நிலையிலும், மின்சார விண்ணப்பத்தில் சம்மதம் தெரிவிக்காத நிலையிலும் பிணைமுறி பத்திரம் (Indemnity Bond) பெற்றுக் கொண்டு மின் இணைப்பு வழங்கலாம் என்று கடித எண்.மே.பொ/ஊ.மி.ம.மே(ப)/செ.பொ/ஊ.மி/உ.செ.பொ1/கோப்பு எண்.148/நாள் 27.10.2010–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டி, ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்சார பகிர்மான விதித்தொகுப்பு அமலுக்கு வந்தபிறகும் மேற்கண்ட கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளதால் வாரியத்தில் அந்த நடைமுறை உள்ளது என்றும் வாதிட்டு, எனவே, தன்னுடைய விண்ணப்பத்தையும் Indemnity Bond பெற்றுக்கொண்டு பதிவு செய்யப்படவேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

11.3 எதிர்மனுதாரர், மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(2)ன் படி விவசாய மின் இணைப்பு கோரும் கிணறு உள்ள சர்வே எண், கூட்டு உரிமையாக இருப்பின் அனைத்து உரிமையாளர்களின் கையொப்பம் அல்லது கூட்டு உரிமையாளர்களின் சம்மதக் கடிதம் வேண்டும் என்று தெரிவித்து, எனவே, பிணைமுறி பத்திரம் பெற்றுக்கொண்டு விண்ணப்பத்தை பதிவு செய்ய விதிகளின்படி முடியாது என்று வாதிட்டுள்ளார்.

11.4 மேலும், மாண்புமிகு மதராஸ் உயர்நீதிமன்றம், W.P. No.22941 of 2010ற்காக 17.7.2013ல் வழங்கிய தீர்ப்பில் மின்சார பகிர்மான விதி 27(2)ன் படி விவசாய மின்இணைப்புகள் மற்ற கூட்டு உரிமையாளர்களின் மறுப்பின்மை சான்று பெறாமல் வழங்க முடியாது என்று ஆணையிட்டுள்ளது என்பதையும் சுட்டிகாட்டி வாதிட்டுள்ளார்.

11.5 மேலும், இயக்குனர்(பகிர்மானம்) அவர்களின் 1.2.2016 நாளிட்ட கடிதத்தின்படி விவசாய மின்இணைப்பு விண்ணப்பம் பெறும்பொழுது மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் பிரிவு 27(2)ன் படி படிவம்–2ல் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு அனைத்து கூட்டு உரிமையாளர்களின் ஒப்பம்,

அல்லது சம்மதக் கடிதம் பெறவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் வாதிட்டுள்ளார். மேலும், இது சம்பந்தமாக மேற்கண்ட கடிதத்தில் மதராஸ் உயர்நீதிமன்றம் W.A. No.261 of 2015 & M.P.No.1 of 2015ல் வழங்கியுள்ள தீர்வும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்றும் வாதிட்டுள்ளார்.

11.6 இந்த மேல்முறையீட்டாளர் கூட்டு உரிமையாளர்களின் சம்மதக் கடிதம் இல்லாநிலையில் பிணைமுறி பத்திரம் பெற்றுக் கொள்ளலாம் என்று சுட்டிக்காட்டியுள்ள வாரியத்தின் ஆணைகள், ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்சாரப் பகிர்மான விதித்தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்பாக வாரியத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் ஆகும். மின்சர பகிர்மான விதித்தொகுப்பு 1.9.2004 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, 1.9.2004லிருந்து ஒழுங்குமுறை ஆணையம் விதித்துத்துள்ள விதிகள்தான் உரிமம்தாரரை கட்டுப்படுத்தும். அந்த விதிகளுக்கு புறம்பாக உள்ள வாரிய ஆணைகள் செல்லத்தக்கது அல்ல. எனவே, உரிமம்தாரரின் ஆணைகளில் பிணைமுறி பத்திரம் பெற்றுக்கொண்டு கூட்டு உரிமையாளர்களின் சம்மதக் கடிதம் இல்லாத நிலையில் விவசாய மின்இணைப்பு வழங்கலாம் என்று உள்ளதால் தன்னுடைய விவசாய விண்ணப்பத்தையும் பதிவு செய்யவேண்டும் என்ற மேல்முறையீட்டாளரின் வாதம் ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்கிறேன்.

11.7 எதிர்மனுதாரர் மின்சார பகிர்மான விதி 27(2) ன்படி விவசாய மின் இணைப்பு பெறுவது சம்பந்தமாக மதராஸ் நீதிமன்றம் W.P.No.22941 of 2010 அளித்த ஆணையையும் மற்றும் மேல் முறையீட்டில் மதராஸ் நீதிமன்றம் W.A.No.261 of 2015 & M.P.No.1 of 2015 ல் அளித்த ஆணையையும் குறிப்பிட்டு வாதிட்டுள்ளார். இது சம்பந்தமாக மதராஸ் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட ஆணையின் சம்மந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“W.P.No.22941 of 2010 :*

*****

*10. From the reading of Regulation 27(2) of the Tamil Nadu Electricity Distribution Code, 2004, it is clear that the agricultural electricity service connection cannot be granted without a ‘No Objection‘ certificate being obtained from the co-sharers of the well in question. *****

*11. It is not in dispute that the pettoner had not fulfilled the necessary conditions, as stipulated under Regulation 27(2) of the Tamil Nadu Electricity Distribution Code, 2004, in such circumstances, the writ petition filed by the petitioner is devoid of merits and therefore, it is liable to be dismissed. However, it is made clear that if the petitioner is able to get the consent of the co-sharers in the well in question, it would be open to him to approach the authorities concerned, for the grant of agricultural electricity connection, as prayed for by him. No costs. Connected M.P.No.1 of 2010 is closed.”*

**11.8** மேற்கண்ட நீதிமன்ற ஆணையை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது மின்சார பகிர்மான விதி **27(2)** ன்படி கிணற்றின் பங்குதாரர்களிடம் தடையில்லா சான்று பெறாமல் விவசாய மின் இணைப்பு வழங்க இயலாது என்றும், ஆனால் கிணற்றின் பங்குதாரர்கள் சம்மதக் கடிதம் அளிக்கும் பட்சத்தில் மனுதாரர் சம்பந்தப்பட்ட அதிகாரியை விவசாய மின் இணைப்பு வேண்டி அணுகலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

*“ W.A.No.261 of 2015 and M.P.No.1 of 2015*
*(இது W.P. No.**22941** of **2010**ன் தீர்வின் மீது தொடரப்பட்ட மேல்முறையீடு ஆகும்)*

*****

*8. It is beneficial to refer and extract the relevant provisions of Clause 27(2) and (4) of the Code 2004.*

*“(2) Supply to Agricltural category : Application for supply to agriculture category shall be in Form 2 of Annexure III. In respect of the agricultuural category, this provision shall be governed by the directives issued by the Commission from time to*

*time, on the basis of the guidance on this matter by the National Electricity Policy (as stiuplated in sub section 4 under secetion 86 of the Act) and the policy directions in public interest given by the State Government under sub section (1) of section 108 of the Act.*

*xxxx xxxxx xxxx*

*(4) An intending consumer who is not the owner of the premises shall prodcue a consent letter in Form 5 of Annexure-III to this code from the owner of the premises for availaing the supply, if the owner is not available or refuses to give consent letter, the intending consumer shall produce proof of his/her being in lawful occupation of the premises and also execute an indemnity bond in Form-6 of the Annexure-III to this code indemnifying the licensee against any loss on account of disputes arising out of effecting service connection to the occupant and acceptance to pay seecurity deposit twice the normal rate".*

*9. On perusal of the relevant provisions, it appears that Clause 27(4) of the Code 2004 is intended to provide supply of electricity to the occupant of the premises, who is unable to obtain consent letter from the owner of the premises either on account of non availability or refusal to give consent letter, on production of proof of occupancy, execution of indemnity bond in Form 6 of the Annexure III and also payment of security deposit twice the normal rate.*

*10. There is no dispute that in the instant case, the property in question is a Well owned by the co-sharers/co-owners. The appellant is one of the sharers / owners of the Well. The well cannot be held from any point of view as premises for the purpose of*

*taking the benefit under the provisions of Clause 27(4) of the Code 2004. The reliance of the petitioner in A.Muthusamy case (supra) is misplaced as the facts in that case was that the intended consumer therein was seeking electricity service connection to the residential house, which was acquired by the Government for the purpose of the housing scheme.*

*11. Clause 27(4) of the Code 2004 contemplates requirement of production of consent letter in Form 5. Form 5 is annexed in Annexure III to the Code. Clause 27(4) refers to a premises whereunder the tenant is an occupant and in the event of refusal to give consent by the owner, a deed of indemnity bond in Form 6 of the Annexure III to the Code shall be executed which also refers to the premises taken on lease by the intending consumer. Form 2 of Annexure III to the Code is the proper form for making an application for agriculture service connection. But, in the case of agriculture service connection, there is no provision for availability of Clause 27(4) of the Code. Sub clause (2) of Clause 27 deals with the supply to agricultural category. Sub clause (3) of Clause 27 deals with application for HT supply and sub clause (4) of Clause 27 deals with the supply of electricity connection to the tenant or lessee in the premises owned by other persons.*

*12. Examining from the all angles, as aforestated , we are of the considered view that the provisions of Clause 27(4) of the Code 2004 shall not be available and applicable in case of agriculture service connection as in the case on hand.*

*****”

11.9 மேற்கண்ட நீதிமன்ற ஆணையை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, 2004–ம் ஆண்டின் விதித்தொகுப்பின் விதி 27(4) ஆனது எவ்விதமான நிலையிலும் விவசாய மின்இணைப்பிற்கு பொருந்தாத ஒன்று என்று மதராஸ் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

11.8 வழக்கெழுவினா ஒன்றிற்கான தீர்வின்படி மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(2)ன் படி ஒரு விவசாய மின் இணைப்பு பெற வேண்டும் எனில், அதற்கான விண்ணப்பத்தில் கிணற்றின் பங்குதாரர்கள் அனைவரும் கையொப்பம் இடவேண்டும். அல்லது மற்ற பங்குதாரர்களின் சம்மதக் கடிதம் இணைக்கப்படவேண்டும். மேலும், மதராஸ் உயர்நீதிமன்றத்தின் W.P. No.22941 of 2010 மற்றும் W.A. No.261 of 2015 and M.P.No.1 of 2015 ஆகியவைகளில் இடப்பட்ட தீர்ப்பின்படியும், இந்த மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான கூட்டு உரிமைதாரர்களின் ஒப்பம் / சம்மதக் கடிதம் இல்லாமல் பிணைமுறிவுப்பத்திரம் மட்டும் பெற்றுக்கொண்டு விவசாய மின் இணைப்பு விண்ணப்பத்தை பதிவு செய்து மின் இணைப்பு வழங்க வேண்டும் என்பது ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

12. <u>முடிவுரை :</u>

12.1 வழக்கொரு வினா ஒன்று மற்றும் இரண்டிற்கான தீர்வுகளின்படி, நாமக்கல் மின் பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வில் மாற்றம் எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

12.2 மேற்கண்ட முடிவுடன் மேல் முறையீட்டு மனு எண் 93/2015 முடிவிற்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. கே. ராமசாமி,
த/பெ.கருப்பண்ண கவுண்டர்,
சாணாங்காடு
நல்லியம்பாளையம் புதூர்,
வேலூர் – 638 182.

2) செயற்பொறியாளர்,
ப. வேலூர்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பைபாஸ் ரோடு,
பரமத்தி வேலூர் – 638 182.

4) மேற்பார்வை பொறியாளர்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
32/1 கருப்பண்ணன் தெரு,
பரமத்தி ரோடு,
நாமக்கல் – 637 001.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19–A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.